# வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மாகாண ஆக்கக்கூறு - 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீளளிப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமையினால் திருப்திகரமான அளவீடுகளை எடுத்திருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 780,930,315 ஆகவும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,481,263,816 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவுகள், முன்னைய ஆண்டிற்கான செலவுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவினத்தின் வகை | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சிவில் வேலைகள் | 756,041,451 | 530,254,792 | 1,436,296,242 |
| நிலையான சொத்துக்கள் | 143,500 | 3,179,095 | 3,396,371 |
| கடன் வட்டி | 9,912,013 | 3,032,215 | 12,944,228 |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 14,833,351 | 11,265,681 | 28,626,975 |
| மொத்தம் | 780,930,315 | 547,731,783 | 1,481,263,816 |

### 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் இருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | யூஎஸ். டொலர் | ரூபா. |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 511,490 | 58,259,403 |
| கூட்டு:- | | |
| மீளளிப்புகள் | 1,813,411 | 223,569,089 |

| | | |
|---|---|---|
| வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபம் | - | 3,520,862 |
| | ---------------------- | --------------- |
| | 2,324,901 | 285,349,354 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 2,307,247 | 283,104,449 |
| | -------------------- | ------------- |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 17,654 | 2,244,905 |
| | ======== | ======== |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 திட்டமிடலும் மேற்பார்வையும்

செயற்திட்டங்களின் எல்லாவற்றையும் உள்ளடக்கப்பட்டதன் பிரகாரம் நிதி மற்றும் பௌதீக இலக்குகளுடன் மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு பொறுப்புக்களைக் குறிப்பிட்டு மொத்த செயற்பாட்டுக் காலத்தையும் உள்ளடக்கும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியத்தை ஈடுபடுத்தி செயற்திட்டக்காலத்தினுள் செயற்திட்ட இலக்கினை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறான திட்டம் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒருங்கிணைத்தல் படிகளின் கொடுப்பனவு

2012 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைத்தல் படிகளாக வடமாகாண சபையின் பிரதம செயலாலாளர், உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாலாளர் என்போருக்கு ரூபா 360,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட வேலைகளை ஒருங்கிணைப்பதற்காக படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றியமை தொடர்பானது தவிர செயற்பாடுகளை ஒருங்கிணைத்தமைக்கான சான்றுகள் அதாவது செய்யப்பட்ட செயற்பாட்டின் தன்மை மற்றும் விபரம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர்களினால் எடுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை என்பன கண்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 இன் 22 ஆம் உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் மாதத்திற்கு ரூபா 50,000 ஐ விட அதிகமாக ஒருங்கிணைப்புப் படியாக பெறுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நிதி மற்றும் செற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 நிதியத்தின் பயன்பாடு

செயற்திட்டம் இலங்கை ரூபா 3,530.8 மில்லியனிற்கு சமமான யூ.எஸ். டொலர் 27.16 மில்லியன் மொத்தக் கிரயத்துடன் 2010 ஒக்தோபர் இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்குரிய நிதிகளின் நிதியீட்டம், பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பவற்றிற்குரிய முக்கியமான புள்ளிவிபரங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கரயம் | | 2012 ஆம் ஆண்டிற் கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டில் நிதிகளின் பயன்பாடு | 2012 திசெம்பர் 31 வரை திரண்ட பாதீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 வரை திரண்ட நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். |
| ஏடீபீ | 24.40 | 3,172.0 | 792 | 700.7 | 1,366 | 1,318.4 |
| ஜீஓஎஸ்எல் | 2.76 | 358.8 | 81 | 80.2 | 166 | 162.8 |
| | 27.16 | 3,530.8 | 873 | 780.9 | 1,532 | 1,481.2 |

### 3.3.2 பௌதீக செயலாற்றல்

வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 140.81 கிலோ மீற்றர் நீளமான வீதிகளை நிர்மாணத்திற்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,893,458,068 தொகையான 06 வீதிப் பொதிகளை 04 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கியிருந்தது. கீழே காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் 106 கிலோமீற்றர் நீளமான வீதி 04 பொதிகளின் நிர்மாணங்கள் நலிவான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | வீதிப் பொதி | வீதியின் மொத்த நீளம்-கி.மீ | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | திருத்தப்பட்ட பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கல்களின் சதவீதம் | 2013 யூலை 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கல்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | % | % |
| (i) | என்பீ01-என்பீஎம்ஏசீ001 | 3.71 | | | 98.72 | 100 |
| | -என்பீஎம்ஏசீ005 | 5.07 | | | 99.57 | 100 |
| | -என்பீஎம்ஏசீ007 | 3.48 | | | 90.75 | 100 |
| | -என்பீஎம்ஏசீ010 | 2.00 | | | 100.00 | 100 |
| | -என்பீஎம்ஏசீ020 | 0.84 | | | 100.00 | 100 |
| (ii) | என்பீ02-என்பீஏஎம்029 | 26.96 | 2013.02.10 | 2013.10. 31 | 44.10 | 58 |
| (iii) | என்பீ03-09 வீதிகள் | 16.23 | 2013.02.09 | | 100.00 | 100 |
| (iv) | என்பீ04-என்பீவீஏசீ027 | 5.98 | 2013.02.09 | 2013.05.25 | 93.90 | 98 |
| | -என்பீவீஏசீ029 | 10.20 | 2013.02.09 | 2013.05.25 | 66.66 | 91 |
| | -என்பீவீஏசீ034 | 9.68 | 2013.02.09 | 2013.05.25 | 73.85 | 96 |
| (v) | என்பீ05--என்பீவீஏசீ007 | 15.33 | 2013.02.09 | 2013.05.25 | 39.35 | 80 |
| | -என்பீவீஏசீ010 | 13.91 | 2013.02.09 | 2013.05.23 | 25.44 | 67 |
| (vi) | என்பீ06--என்பீவீஏசீ014 | 24.14 | 2013.02.09 | 2013.05.23 | 29.12 | 52 |
| | -என்பீவீஏ032 | 3.28 | 2013.02.09 | 2013.05.23 | 98.94 | 100 |
| | | 140.81 | | | | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு ஒப்பந்த பொதிகளின் நீளத்தில் 75.28 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 106 கிலோமீற்றர் நீளமான வீதிகளை உள்ளடக்கிய நான்கு பொதிகளின் செயலாற்றல் இலக்கினை விட பின்தங்கிக் காணப்பட்டது.

(ஆ) நான்கு ஒப்பந்தத் பொதிகளின் திருத்தப்பட்ட இலக்குத் திகதி 2013 மே மாதம் காலாவதியாகிய போதிலும் 2013 யூலை 31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த பொதிகளின் செயலாற்றல் மட்டம் 58 சதவீத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

(இ) ஒப்பந்தக் கொடுப்பனவுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ஒப்பந்தக்காரர்களுக்கு செய்யப்பட்ட பகுதிக் கொடுப்பனவுகளிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 செயற்திட்ட செயற்பாடுகளை அமுல்படுத்துதல்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 வருட காலம் கடந்திருந்த போதிலும் வட மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்காக செயற்திட்ட நிதிகளைப் பயன்படுத்தி அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒரு கூறினை முறையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.